25.10.2025

**அ.வ.எண் 196/2012**

**மனு எண் 19/2025 அனுமதிக்கப்பட்டு நீ.சா.1 பாலாஜி, வட்டாட்சியர், மதுராந்தகம் நீதிமன்ற தரப்பு சாட்சியை 1, 2 மற்றும் 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நீ.ம.சா.ஆ.5 1377, 1382 மற்றும் 1385க்குரிய பசலிக்கான புதுச்சேரி கிராமம் சர்வே எண்.40/2 மற்றும் 39 வெங்கடசுப்பாரெட்டியார் பெயரில் அடங்கல் பதிவேடு உள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.5 படி மேற்சொன்ன சர்வெ எண்ணிற்குரிய உரிமையாளர் வெங்கடசுப்பாரெட்டியார் என்றால் அடங்கல்படி சரியாகும். நீ.ம.சா.ஆ.4 சர்வே எண்.39 மற்றும் 40/2 அ பதிவேடுட்டில் பட்டா எண்.235க்கு வெங்கடசுப்பாரெட்டியார் பெயரில்தான் பதிவாகி உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன நீ.ம.சா.ஆ.4 மற்றும் 5 ஆகிய ஆவணங்களில் வெங்கடசுப்பாரெட்டியாரை தவிர்த்து வேறு நபர்களுக்கு உரிமை இருந்தால் அவர்கள் பெயரும் குறிப்பிட்டிருக்கும் அல்லது வகையறா என்றாவது குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு ஆவணங்களிலும் அப்படி எதுவும் குறிப்பிடபடவில்லை தனிநபர் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

2. நீ.ம.சா.ஆ.3 கணினி பட்டா எந்த வருடம் அதில் உள்ள நபர்களின் பெயரில் மாற்றப்பட்டது என்றால் தெரியாது. அந்த பட்டாவில் உள்ள 36 நபர்களின் அவர்களுக்கான சர்வெ எண்களில் எவ்வளவு விஸ்தீரணம் உரிமையுண்டு என்பது ஆவணங்களை பார்த்தால்தான் தெரியும் என்றால் சரிதான். எனவே நீ.ம.சா.ஆ.3 பட்டாவை மட்டும் வைத்து அந்த சர்வே

எண்களில் உள்ள நபர்கள் உரிமையாளர் என்று கூறமுடியாது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2 சர்வே எண்.30 மற்றும் 40/2 கணினி பட்டா அந்த கணினி பட்டா பட்டாதாரர்கள் பெயரில் எப்போது மாற்றப்பட்டது என்றால் பட்டாவை வைத்து கண்டுபிடிக்க முடியாது.

3. நீ.ம.சா.ஆ.5 அடங்கல் பதிவேடு வெங்கடசுப்பாரெட்டியார் பெயரில் பதிவாகி உள்ளது அதன்பின்பு நீ.ம.சா.ஆ.2 மற்றும் 3 பட்டாவில் உள்ள பட்டாதாரர்கள் பெயரில் எவ்வாறு எதன் அடிப்படையில் மாற்றப்பட்டது என்றால் விசாரணை அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை மற்றும் விசாரணையில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்பது இந்த விசாரணை அறிக்கையை பார்த்தால் தெரியும். மேலும் மேற்சொன்ன பட்டாவின் உண்மை தன்மை தெரியும் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1 சிட்டாவில் 27.04.1973 என்ற தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது அந்த படிவத்தினுடைய தேதி ஆகும். நீ.ம.சா.ஆ.1 எந்த வருடத்திற்கான பசலி என்றால் 1380 லிருந்து 1390 வரையிலான பசலி ஆகும். எவ்வாறு எப்படி 1380 க்கான பசலி என்று சொல்கிறேன் என்றால் எங்களுடைய அலுவலக பதிவேட்டில் முதல் பக்கத்தில் நாங்கள் அந்த ஆண்டிற்கான பசலி என்று குறியீடு செய்து வைத்துள்ளோம்.

4. நீ.ம.சா.ஆ.1ல் துண்டுதாள் போட்டு மேல்பக்கம் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1ல் தாவாசர்வே எண்ணை தவிர்த்து கூடுதலாக 5 சர்வே எண்கள் உள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1ல் கண்டுள்ள 28 நபர்களும் தாவாசர்வே எண்ணில் உரிமையாளர்கள் என்று நீ.ம.சா.ஆ.1 வைத்து மட்டும் சொல்ல முடியாது அவர்கள் உடைய முன்

ஆவணங்களை பார்த்தால்தான் தெரியும் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1ல் உள்ள 28 நபர்களுக்கு தாவா சர்வெ எண்ணை தவிர்த்து மீதம் உள்ள சர்வே எண்களுக்கு உரிமை இருந்தால் கூட அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மேலும் அந்த ஆவணத்தில் விஸ்தீரணத்தில் திருத்தம் செய்துள்ளதால் அதற்காக அந்த ஆவணம் ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல யு.டி.ஆர் திட்டத்தின்போது ஏக்கர் நிலங்களை ஹக்டேர் மற்றம் ஏர்ஸ் ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

5. பொதுவாக வருவாய் துறையில் திருத்தம் செய்தால் திருத்தம் செய்த தேதி மற்றும் உத்தரவு எண் குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். ஆனால் நீ.ம.சா.ஆ.1 சிட்டாப்படி அனைத்து நிலங்களிலும் திருத்தம் செய்யப்பட்டதால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. நீ.ம.சா.ஆ.1ல் திருத்தம் செய்த அதிகாரிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்கள் இன்றைய தேதி வரை அமலில்தான் உள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1ல் உள்ள 2 முதல் 28 நபர்கள் பெயரில் 1967 வருடம் அல்லது அதற்கு முந்தைய ஆண்டிற்கான தனிப்பட்ட ஆவணம் அவர்களின் பெயரில் உள்ளதா என்றால் சர்வே எண்.4/1எ ல் யு.டி.ஆர் அ பதிவேட்டில் பட்டா எண்.335க்கு 28 நபர்கள் பெயரில் உள்ளது. மற்ற சர்வே எண். 39, 40/2 பற்றி தெரியாது. அந்த சர்வே எண்ணிற்குரிய முந்தைய ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

6. பொதுவாக மொத்த சொத்துகளிலிருந்து ஒரு பகுதி நிலத்தை மட்டும் உட்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்யும்போது அந்த சொத்துக்குரிய 4 எல்லைகளை தெரிந்தால்தான் செய்யமுடியும் என்றால் ஐக்குபந்தி மற்றும்

அவர்களின் அனுபவத்தை வைத்து அவர்களுக்கு உட்பிரிவு செய்து கொடுப்போம். நீ.ம.சா.ஆ.2 மற்றும் 3 உள்ள சர்வே எண்கள் உட்பிரிவு எதன் அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் கிரையதாரர்கள் ஆவணங்களை வைத்து தான் உட்பிரிவு செய்யப்பட்டது. நீ.ம.சா.ஆ.2 மற்றும் 3 சர்வே எண்.39, 4/1எ மற்றும் 40/2 உட்பிரிவு செய்யபட்டு உள்ளது என்றால் சரிதான்.